

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | மார்ச் 04, 2021 | புரட்சி 20 | முழக்கம் 8 | விலை: ரூ.3.00

## ‘ஆளுநர்’ – ‘பிரதமர்’ பதவி வேண்டுமா?

கிரிமினல் குற்றங்களில்கூட ‘மனுசாஸ்திரம்’ பதுங்கி இருக்குது சார், என்றார் ஒரு நண்பர். அது எப்படி என்று கேட்டேன். நண்பர் – ஒரு நீண்ட பட்டியலையே போட்டார்.

“சீனிவாச அய்யங்கார் – நடுவீதியில் கட்டிப் புரண்டு சண்டை; குப்புசாமி சாஸ்திரி – வீச்சரிவாள் தூக்கினார்; ராமச் சந்திர அய்யர் – சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடினார்; எம்.பிச்சுமணி குருக்கள்–பிக்பாக்கெட் அடித்தார்” என்றெல்லாம் செய்திகளைப் படித்திருக்கிறீர்களா? என்றார். அப்படி ஒன்றும் அண்மையில் படித்ததாக நினைவில் இல்லையே. அவர்கள் ஒழுக்க சீலர்கள்; வேதம் படித்தவர் களாயிற்றே – என்றேன்.

உடலில் வலிமை தேவைப்படும் கிரிமினல் குற்றங்களுக்கு அவர்கள் வரமாட்டார்கள் சார். ஏன் உடல் உழைப்புக்கே வரமாட்டாங்க. சாலை போடுவது, மூட்டை தூக்குவது போன்ற உடல் உழைப்புக்கும் அவர்களுக்கு வெகுதூரம். உடல் நலுங்காமல், குலுங்காமல் மூளையை மட்டுமே பயன்படுத்தும் ‘கிரிமினல்’ கலை அவர்களுக்கு தெரியும்” என்றார்.

தெளிவாகப் புரியும்படி சொல்லுங்க சார், என்றேன்.

“அவர்கள் பங்கு மார்க்கெட்டுகளில் புகுந்து விளையாடு வார்கள்; நாட்டையே அதிர வைத்த ஹர்ஷத் மேத்தாவை நினை விருக்கிறதா? வங்கிகளில் பல்லாயிரம் கோடி சுருட்டுவார்கள்! அய்.சி.அய்.சி.அய். வங்கித் தலைவர் சந்தாகோச்சார் என்ற அம்மையாரை நினைவிருக்கிறதா? ‘தாலி கட்டிய கணவர்’ தீபக் கோச்சாருக்காக பதிபக்தியுடன் கோடிக்கணக்கில் மோசடி செய்து இப்போது நீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருக்கிறாரே, அவர் தான்! இவர்கள் சாலைகளில் மீசையை முறுக்கிக் கொண்டு திரிய மாட்டார்கள்; காவல் துறையிடம் பிடிபட மாட்டார்கள்.

ஆனால், குடியரசுத் தலைவர் மாளிகையில் இருப்பார்கள்; மத்திய அரசுத் துறை செயலாளர்களாக இருப்பார்கள்; அதிகார மய்யங்களில் குவிந்து கிடப்பார்கள்; அமைச்சர்களுக்குத் தெரியாமலேயே தாக்கீதுகளை அனுப்புவார்கள்; பேரறிவாளனுக்கு தண்டனைக் குறைப்பு தர முடியாது என்று குடியரசுத் தலைவரே மறுத்து விட்டார் என்று குடியரசுத் தலைவருக்கு தெரிவிக்காமலேயே உச்சநீதிமன்றத்தில் பச்சைப் பொய்யைத் துணிந்து கூறுவார்கள்.

கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு ‘மூளை’யே இவர்கள்தான் சார். வரி ஏய்ப்பு செய்ய வேண்டுமா? வாங்கிய கடனைத் திருப்பித் தராமல் வங்கிக்கு பட்டை நாமம் போட வேண்டுமா? எல்லாவற்றுக்கும் இவர்களிடம் திட்டம் இருக்கிறது.

இதோ பாருங்கள்! ‘தினமலர்’ (பிப்.24) நாளேட்டில் கடந்த வாரம் வந்த ஒரு செய்தி:

“பிரதமர் – கவர்னர் பெயரைப் பயன்படுத்தி 100 கோடி வரை சுருட்டிய கும்பல் கைது. பெங்களூரைச் சார்ந்த மகாதேவன் (அய்யர்), அவரது மகன் அங்கீட் (அய்யர்), ஓசூரைச் சார்ந்த ஓம் அய்யர் சென்னையில் வேலை வாய்ப்பு அலுவலகம் நடத்தி வந்தனர்.

மத்திய அரசு டெண்டர் வாங்கித் தருவதாகக் கூறி, தூத்துக்குடி தொழிலதிபரிடம் ரூ.18 கோடி மோசடி; சி.பி.அய். இயக்குனர் போலவே பரிந்துரைக் கடிதம் தயாரித்து, சென்னை தொழிலதிபரிடம் ஒரு கோடி வசூல்; முக்கிய புள்ளிகளுக்கு பா.ஜ.க.வில் மாநிலங்களவை ‘சீட்’ வாங்கித் தருவதாக பல கோடி மோசடி; மூலிகை பெட்ரோல் தயாரித்த ராமர் பிள்ளைக்கு அனுமதி பெற்றுத் தருவதாக மோசடி” என்று புகுந்து விளையாடியிருக்கிறார்கள்.

ஆளுநர் பதவி வேண்டுமா? அடுத்த பிரதமராக வேண்டுமா? சி.பி.அய். இயக்குனராக வேண்டுமா? உச்சநீதிமன்ற நீதிபதியாக முடியுமா? – எல்லாவற்றுக்கும் இவர்களைப் பிடித்தால் போதும். அவ்வளவு சக்தி வாய்ந்த கிரிமினல்கள்.

இப்போது சொல்லுங்கள் அடிதடி, குத்துவெட்டு, கிரிமினல்களுக்கு ஒரு கூட்டம்; நாட்டையே சூறையாடும் கிரிமினல் நடவடிக்கைகளுக்கு ஒரு கூட்டம்; இது மனுதர்மம் இல்லையா, சார்? என்றார் நண்பர்.

நான் வாய்விட்டு சிரித்தேன். ஏன் சிரிக்கிறீர்கள்? என்றார்.

“போச்சு; போச்சு; தர்மம் போச்சு; நியாயம் போச்சு; கண்டவனும் தலைவனாகி விட்டான்; ஊழல் பெருகிடுச்சு; ஆன்மிக பூமி நாசமாயிடுச்சு” என்று இவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்களே, அதை நினைத்தேன்; சிரித்தேன்” – என்று பதில் சொன்னேன்.

(**குறிப்பு :** ‘தினமலர்’ உள்ளிட்ட அனைத்து ஏடுகளிலும் இந்த செய்தி வந்திருக்கிறது. அந்த ஏடுகள் மோசடி பேர்வழிகளின் பெயரோடு ‘அய்யர்’ என்ற பட்டத்தையும் இணைத்தே வெளியிட்டன. ஆனால், ‘தினமலர்’ மட்டும் ஜாதிப் பெயரை நீக்கம் செய்து தனது ‘ஜாதி ஒழிப்பை’ மனுவாத கிரிமினல்களைக் காப்பாற்றப் பயன்படுத்தியிருக்கிறது. செய்தி வெளியிடுவதிலும் மனுசாஸ்திரம் இருக்குது, சார்!)

**– கோடங்குடி மாரிமுத்து**

## ஆர்.டி.அய். தகவலில் அதிர்ச்சி தகவல்கள்

# அய்.அய்.டி.களில் இடஒதுக்கீடுகள் மறுப்பு

வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து நடைபெற்ற நீண்ட போராட்டங்களின் விளைவாகவே கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு முறை அமலாக்கப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்ட மக்கள், பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினர் சமூகம் என ஒவ்வொருவருக்கும், ஒரு குறிப்பிட்ட சதவீத எண்ணிக்கையில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டுமென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இடஒதுக்கீடு என்பது முறையாக அமலாகிறதா என்றால் இல்லை எனும் ஏமாற்றமே மிஞ்சுகிறது. உயர்கல்வி நிறுவனமான அய்.அய்.டி.களில் இடஒதுக்கீடு முறை என்பது காற்றில் பறக்க விடப்படு வதோடு, பின் தங்கிய மாணவர்களின் உயர் கல்வியும் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது என்பதை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட பின்வரும் விபரங்களிலிருந்து எளிதாக அறிந்து கொள்ளலாம்.

தில்லி, மும்பை, சென்னை, கான்பூர், கரக்பூர் ஆகிய ஐந்து அய்.அய்.டி. நிறுவனங்களில் 2015 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான நான்காண்டு காலத்தில், சிவில், எலக்ட்ரிக்கல், கம்ப்யூட்டர் சயின்ஸ், மெக்கானிக்கல் ஆகிய நான்கு பாடப் பிரிவுகளில் மொத்தம் விண்ணப்பித்த 95,445 மாணவர்களில் 3279 பேருக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில், பொது பிரிவு - 2363; பிற்படுத்தப்பட்ட பிரிவு - 638; பட்டியல் சாதிகள் - 238; பழங்குடியினர் - 40 - என்ற அடிப்படையில் மாணவர்களுக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இட ஒதுக்கீடு முறையின்படி பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27%, பட்டியல் சாதிகளுக்கு 15%, பழங்குடியினருக்கு 7.5% எனும்அடிப்படையில் மாணவர்களுக்கு இடங்கள் அளிக்கப்படவில்லை. மேற்கண்ட அடிப்படையில் இடஒதுக்கீடு முறை அமலாக்கப்பட்டிருந்தால் பிற்படுத்தப்பட்ட பிரிவில் - 885; பட்டியல் சாதிகள் பிரிவில் - 492; பழங்குடியினருக்கு - 246 எனும் எண்ணிக்கையில் மாணவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும். இடஒதுக்கீடு முறை அமலாகாததால் மொத்தம் 1623 மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய இடங்கள் வெறும் 916 ஆக குறைக்கப் பட்டதோடு, இடஒதுக்கீட்டின்படி பயனடைய வேண்டிய 707 மாணவர்கள் தங்களுக்கான வாய்ப்பையும் இழந்திருக்கிறார்கள். இது மிகப் பெரும் சமூக அநீதியாகும். இடஒதுக்கீட்டு அடிப்படையில் மொத்தம் விண்ணப்பித்திருந்த 23,629 மாணவர்களில் இடம் கிடைத்தவர்களின் எண்ணிக்கை 849 என்பதை ஒப்பிடும் போது 3.5% மாணவர்களுக்கு மட்டுமே இடம் கிடைத்திருக்கிறது. அதுவும் பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினருக்கு கிடைத்த இடங்கள் வெறும் 2.8% மட்டுமே.

சென்னை அய்.அய்.டிஇல் ஆராய்ச்சி பாடத்தில் உள்ள 15 பாடப்பிரிவுகளில், 11 பிரிவுகளில் பட்டியல்சாதிகள் மாணவர் களுக்கான இடங்களும் 14 பாடப்பிரிவுகளில் பழங்குடியின மாணவர் களுக்கான இடங் களும், 4 பாடப் பிரிவுகளில் பிற்படுத்தப்பட்ட வர்களுக்கான இடங்களும் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை. அந்த இடங் களெல்லாம் பொது பிரிவு மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி பாடங்களில் பின் தங்கிய மாணவர்களுக்கான வாய்ப்பு எவ்வாறு தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த விபரங்கள்மூலம் உணர முடியும். சென்னை அய்.அய்.டி.இல் கடந்த 2015 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் முனைவர் பட்டத்திற்கான 15 பாடப் பிரிவுகளில் சேர்க்கப்பட்ட 2195 மாணவர்களில், பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு 849 இடங்கள் மட்டுமே அளிக்கப்பட்டிருக்கிறது இட ஒதுக்கீடு முறையாக அமலாகியிருந்தால் கூடுதலான இடங்கள் பின் தங்கிய பிரிவி லுள்ள மாணவர்களுக்கு கிடைத்திருக்கும்.

மும்பை அய்.அய்.டி.இல் மொத்தமுள்ள 26 ஆராய்ச்சிப் பாடங்களுக்கான பிரிவுகளில் 26-லும் பழங்குடி மாணவர்களுக்கான இடங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், 25 பிரிவுகளில் பட்டியலின சாதிகளுக்கான இடங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும் இருக்கிறது. 26 பாடப்பிரிவுகளில் 16 பிரிவுகளில் முழுமையாக பொதுப் பிரிவினருக்கும், மீதமுள்ள 10 பாட பிரிவுகளிலும் 75% இடங்கள் அதாவது நான்கில் மூன்றுஇடங்கள் பொது பிரிவினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இட ஒதுக்கீடு முறையை அமலாக்காமல் இருப்பது, பிறகு காலியாக உள்ள அந்த இடங்களை பொதுப்பிரிவினருக்காக எடுத்துக் கொள்வதுமான நடைமுறை அங்கு நீண்ட காலமாக இருந்து வருகிறது. இத்தோடு, விண்ணப்பிக்கும் மாணவர்களை நேர்காணல் செய்யும் போதே,சேர்த்துக் கொள்ளாமல் நிராகரிக்கும் நடைமுறையையும் மும்பை அய்.அய்.டி பின்பற்றுகிறது. நேர்காணலுக்காக அழைக்கப்பட்ட 25,300 பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியின மாணவர்களில் வெறும் 815 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்கிற விபரத்தின் மூலம் அவர்களின் அணுகுமுறை எத்தகையது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. கிடைத்துள்ள இத்தகைய விபரங்களை ஒப்பிட்டு பார்க்கும் போது அநேகமாக நாட்டில் உள்ள மிகப் பெரும்பாலான உயர்கல்வி நிறுவனங்களில் இத்தகைய நடைமுறைதான் அமலில் இருக்கும் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

## ‘கறுப்பர் கூட்டம்’ நாத்திகன் விடுதலை; உற்சாக வரவேற்பு

‘கறுப்பர் கூட்டம்’ நாத்திகன், 19.2.2021 மாலை 7 மணியளவில் சென்னை புழல் சிறையிலிருந்து விடுதலையாகி, சென்னை இராயப்பேட்டை, வி.எம் தெரு, பெரியார் படிப்பகம் அருகில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார்.




தொடர்ந்து சென்னை மாவட்ட கழகச் செயலாளர் உமாபதி வரவேற்று உரையாற்றினார்.

நாத்திகன் வரவேற்பில் சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி தென்சென்னை மாவட்ட துணைச் செயலாளர் ரூதர்புரம் கார்த்தி, தோழர்கள் அரங்க குணசேகரன், பார்த்திபன், வளர்மதி ஆகியோரும் உடனிருந்தனர்.

நாத்திகன் வழக்கை கழக வழக்கறிஞர் துரை அருண் நடத்தினார்.

தலையங்கம்

## ‘உள் ஒதுக்கீடு’ அறிவிப்புகள் உணர்த்துவது என்ன?

தேர்தல் களத்தில் கூட்டணி பேரத்துக்காக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளோடு பிணைந்து நிற்கும் இடஒதுக்கீடு கொள்கை பகடைக்காயாக்கப்படுகிறது. தமிழகத் தேர்தல் அறிவிப்பு வெளியிடுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு அவசர அவசரமாக வன்னியர் சமுகத்துக்கு 10.5 சதவீதம் உள்ஒதுக்கீடு வழங்கும் தீர்மானத்தை தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தாக்கல் செய்து விவாதங்கள் ஏதுமின்றி (எதிர் கட்சிகள் அவையில் இடம் பெறவில்லை) நிறைவேற்றியிருக்கிறார். அடுத்த நாளே பா.ம.க.வுடன் இழுபறியாக இருந்து வந்த அ.தி.மு.க. கூட்டணி பேரம் முடிவுக்கு வந்து விட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 சதவீத இடஒதுக்கீட்டிலிருந்து வன்னியர்களுக்கு 10.5 சதவீதம்; சீர் மரபினருக்கு 7 சதவீதம்; மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 2.5 சதவீதம் என்று பிரித்து வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த ஒதுக்கீடு எண்ணிக்கைகளுக்கு பின்பற்றப்பட்ட அளவுகோல் என்ன என்பது அடிப்படையான கேள்வி. ஜாதி அடிப்படையிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு; கல்வி, அரசுப் பணிகளில் குறிப்பிட்ட ஜாதி பெற்றுள்ள பிரதிநிதித்துவம் குறித்த விவரங்கள் ஏதுமின்றி அவசர கோலத்தில் தேர்தல் அரசியலுக்காக அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இந்த முடிவை எடுத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டில் உள்ள நியாயத்தை புறக்கணித்து விட முடியாது. எடப்பாடி பழனிச்சாமி அவர்களே இது குறித்து ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி குலசேகரன் தலைமையிலான குழுவை நியமித்திருக்கிறார். அந்தக் குழுவின் பணி இன்னும் முடிவடையவில்லை. அதன் காரணமாகவே இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாவில் எதிர்காலத்தில் மாற்றங்கள் வரும் வாய்ப்புகள் உண்டு என்று முதலமைச்சர் பழனிச்சாமியே சட்டசபையில் அறிவிக்க வேண்டிய நிலை.

தற்போதுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 சதவீதப் பிரிவே பிற்படுத்தப்பட்டோருக்கான 50 சதவீத இடஒதுக்கீட்டிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள உள் ஒதுக்கீடுதான். 1989 இல் கலைஞர் முதல்வராக இருந்தபோது அவரது முயற்சியால் உருவாக்கப்பட்டது. இந்த மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான பிரிவுக்கு அடிப்படையாக ஜே.ஏ. அம்பா சங்கர் தலைமையில் 1982 இல் அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் அறிக்கை அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. 1985 வரை 4 ஆண்டுகள் பணியாற்றிய இந்த ஆணையம், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களை வரையறுத்தது. அவர்களின் மக்கள் தொகையும் சீர் மரபினர் என்ற சமூகப் பிரிவினரையும் சேர்த்து மக்கள் தொகையில் 24.65 சதவீதம் என கண்டறிந்தது. 31 ஆண்டுகளுக்கு முன்பு அம்பாசங்கர் ஆணையத்தின் அறிக்கையை அப்படியே இப்போது ஏற்றுக் கொள்ள முடியுமா என்பது மற்றொரு கேள்வி! இதைவிட முக்கியப் பிரச்சினையை கருதிப் பார்க்க வேண்டும். வன்னியர் சீர் மரபினர் சமுகத்தைவிட மிகவும் கீழ் நிலையிலுள்ள போயர், ஒட்டர், குயவர், வண்ணார், நாவிதர், குருவிக்காரர், புள்ளான் வேட்டுவ கவுண்டர், வேட்டைக்காரர் போன்ற 41 வகுப்பினருக்கு ஒரு கிராமப் பஞ்சாயத்து உறுப்பினராகக் கூட முடியாத நிலையிலும் கல்வி–அரசுப் பணிகளில் யாராவது இருக்கிறார்களா என்று தேடிப் பார்க்க வேண்டிய நிலையிலும்தான் இந்த சமுகத்தினர் இருக்கிறார்கள். இந்த பிரிவினருக்கு 2.5 சதவீத ஒதுக்கீடு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. குரலற்ற மக்களாக வாழும் இவர்களுக்கு தமிழ்நாட்டில் சமுக நீதிக் களத்தில் குரல் கொடுக்க வலிமையான தலைமையும் இல்லை; சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் இல்லை. சம வாய்ப்புகளைப் பகிர்ந்தளிப்பதுதான் சமுகநீதியின் அடிப்படைக் கோட்பாடு. மாறாக, ஜாதிக்கான அரசியல் அணி திரட்டல் எனும் நோக்கமாக அது மாற்றப்படும்போது சமுகநீதியின் கண்ணோட்டமே திசை திருப்பப்பட்டு விடுகிறது.

ஏற்கனவே சட்டப்படி அமுலில் உள்ள இடஒதுக்கீடுகளே முழுமையாக நிறைவேற்றப்படுவதும் இல்லை. மத்திய அரசின் கல்வி மற்றும் அரசு பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 27 சதவீத இடஒதுக்கீடானாலும் பட்டியல் இனப் பிரிவின் 22.5 சதவீத இடஒதுக்கீடானாலும் பாதியளவுகூட நிறைவேற்றப்படவில்லை.

பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பனை செய்வதன் வழியாகவும் தமிழக அரசே காலியான அரசுப் பணிகளின் இடங்களில் ‘கான்ட்ராக்ட்’, ‘அவுட்சோர்சிங்’ அடிப்படையில் பணியாளர்களை நிரப்புவதாலும் இடஒதுக்கீடு பறி போகிறது. அகில இந்திய மருத்துவ கோட்டாவில் இந்த ஆண்டு 3000 பிற்படுத்தப்பட்டோருக்கான இடங்களை வழங்க, மோடி ஆட்சி மறுத்துவிட்டது. தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் மத்திய அரசின் நிதி உதவி பெறுவதாலேயே உயர் பட்டப்படிப்புகளில் 50 சதவீத இடஒதுக்கீட்டை அமுல்படுத்தக் கூடாது; 27 சதவீதம் மட்டுமே அமுல்படுத்த வேண்டும் என்று பா.ஜ.க. ஆட்சி கட்டாயப்படுத்துகிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் சென்னை, கான்பூர், கரக்பூர் ஆகிய அய்ந்து அய்.அய்.டி. நிறுவனங்களில் இடஒதுக்கீடு நிரப்பப்படுவதே இல்லை. (இது குறித்து விரிவான செய்தி முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது).


‘நீட்’ தேர்வின் பாதிப்பு; தமிழ் தெரியாதவர்களும் தமிழ்நாட்டில் அரசு வேலைக்கு விண்ணப்பிக்கலாம் என்ற அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, அரசு தேர்வாணைய விதிகளில் கொண்டு வந்த திருத்தம். தமிழ்நாட்டின் பொதுத் துறை நிறுவனங்களான நெய்வேலி, ஆவடி தொழில்சாலைகளில் தமிழர்களைப் புறக்கணித்து வடநாட்டுக்காரர்களைக் கொண்டு வந்து திணிக்கும் போக்கு இவைகளால் தமிழர் வேலைவாய்ப்பும் சமுக நீதியும் குலைந்து போய் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. பா.ம.க. நிறுவனர் மருத்துவர் இராமதாசு அவர்களே இது பற்றி தொடர்ந்து அறிக்கைகள் வழியாக அம்பலப்படுத்தியவர் தான். இந்த நிலையில் காகிதங்களில் வெறும் எண்களை மட்டும் எழுதி, சட்டமாக்கிக் கொண்டு, வெற்றிப் பறை கொட்டுவதில் எந்த நியாயமும் இல்லை. உள் ஒதுக்கீட்டின் நியாயங்களை நாம் உறுதியாக ஆதரிக்கிறோம். அதே நேரத்தில் இடஒதுக்கீட்டையே உறுதிப்படுத்தாமல் உள் ஒதுக்கீட்டை வைத்திருப்பதால் கிடைக்கப் போகும் பயன் சமுக நீதிக்கா அல்லது தேர்தல் அரசியலுக்கான ஜாதிய அணி திரட்டலுக்கா என்ற கேள்வியையும் எழுப்ப வேண்டியிருக்கிறது.

# ‘மிகவும் பிற்படுத்தப்பட்டோர்’ பிரிவு உருவான வரலாறு

- தமிழ்நாட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவு 1957 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது.
- 1989இல் கலைஞர் முதல்வராக இருந்த காலத்தில் இந்த மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவினருடன் ‘குற்றப் பரம்பரையாக’ பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் அறிவிக்கப்பட்டு நீதிக்கட்சி ஆட்சியில், அதிலிருந்து விடுவிக்கப்பட்ட வகுப்பினரையும் இணைத்து 20 சதவீத தனி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.
- 1855ஆம் ஆண்டிலிருந்தே சென்னை மாகாணத்தில் தீண்டாமைக்கு உள்ளாகும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு அரசு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்காக கல்வி மான்யம் வழங்கும் விதிமுறைகள் (Grant in aid code) ஒன்று உருவாக்கப் பட்டது.
- கல்விக்காக அரசு நிதி உதவி தாழ்த்தப்பட்டோருக்கு மட்டுமின்றி பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் சிலவற்றுக்கும் கிடைக்கும் வகையில் 1906லும், 1913லும் மேற்குறிப்பிட்ட விதிமுறைகளில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.
- 1954இல் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் செல்லாது என்று உச்சநீதி மன்றம் அறிவித்தது. பெரியார் போராடினார் அதன் காரணமாக, அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம் வழியாக ‘சமூக கல்வி அடிப்படையில்’ பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு உறுதி செய்யப் பட்டது. சட்டத்தில் 15(4) பிரிவு சேர்க்கப்பட்டது. இந்தப் பிரிவின் கீழ் பயனடைவோர் பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பு மாநில அரசுக்கு விடப்பட்டது. இந்த நிலையில் 1931ஆம் ஆண்டு இறுதி வடிவம் தரப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் பட்டியலையே கல்விக்கான சிறப்பு உரிமைகள் வழங்க பயன் படுத்திக் கொள்ளலாம் என்று முடிவு செய்து அரசு ஆணை பிறப்பிக்கப் பட்டது.
- 1947 ஆம் ஆண்டிலிருந்து பட்டியல் இனப் பிரிவுக்கு வழங்கப்படும் முழு கல்விக் கட்டணச் சலுகை உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று பல ஒடுக்கப்பட்ட சமூகங்கள் அரசிடம் வலியுறுத்தி வந்தன.
- 1954இல் தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் சம்மேளனம், தங்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அப்போது முதல்வராக இருந்த காமராசரிடம் கோரிக்கை வைத்தது.
- ‘தீண்டப்படாதவர்களாக’ சலவைத் தொழிலாளர் சமூகம் இல்லை என்பதால் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைப்பது சரியாக இருக்காது என்று கருதிய காமராசர், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டாம், அதே நேரத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப் படும் சிறப்பு உரிமைகளை வழங்க லாம் என்று முடிவு செய்தார். சலவைத் தொழிலாளர்கள் போலவே அவர்கள் நிலையில் உள்ள சமூகத்தினரையும் அடையாளம் கண்டு குறிப்புகளை அனுப்பி வைக்க பல்வேறு துறைகளுக்கும் முதலமைச்சர் காமராசர் உத்தர விட்டார். அப்போதுதான் பிற்படுத் தப்பட்டோரிலேயே மிகவும் பின் தங்கியிருக்கும் பல்வேறு வகுப்புகள் அடையாளம் காணப்பட்டு ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டது. இதுவே மிகவும் பிற்படுத்தப்பட் டோர் பிரிவுக்கான தொடக்கம்.
- 1956ஆம் ஆண்டு, நேரு பிரதமராக இருந்த ஒன்றிய காங்கிரஸ் ஆட்சி யால் நியமிக்கப்பட்ட பிற்படுத்தப் பட்டோருக்கான காகா கலேல்கர் குழு தமிழக அரசின் இந்த மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை தனது அறிக்கையில் ஆதரித்ததோடு இந்தப் பிரிவினருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.
- இந்தப் பரிந்துரையின் அடிப்படை யில் காமராசர் ஆட்சி விரிவாக ஆய்வு செய்து 31.1.1957 இல், அரசாணை ஒன்றின் வழியாக (எண்.353) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை அங்கீகரித்தது. 1957 - 58 ஆம் ஆண்டு கல்வி ஆண்டு முதல் இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்த 58 வகுப்புகளுக்கு தாழ்த்தப்பட் டோருக்கு வழங்குவதைப் போல கல்விச் சலுகைகளை மட்டும் வழங்க அரசு ஆணை பிறப்பித்தது.
- இந்த 58 வகுப்புகளின் எண்ணிக்கையை 39 ஆக குறைத்தது, தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட ஏ.என். சட்டநாதன் தலைமையில் நியமிக்கப்பட்ட முதலாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு. பட்டியலில் இடம் பெற்றிருந்த வேறு மாநில சமூகத்தினரை நீக்கியது.
- இந்தப் பட்டியல் அடிப்படையில் தான் 1989ஆம் ஆண்டு கல்விச் சலுகை மட்டுமே வழங்கி வந்த நிலையைக் கடந்து 20 சதவீதத் தனி இட ஒதுக்கீட்டை கலைஞர் கொண்டு வந்தார். இதுவே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவின் வரலாறு.

**(தகவலுக்கு ஆதாரம்: கோ. அருணாசலம் எழுதிய ‘தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்- வரலாறும் வளர்ச்சியும்’ நூல்; என்.சி.பி.எச்., வெளியீடு)**

## யார் மைனாரிட்டி?



நாம் மைனாரிட்டி என்று சொன்னவுடன் பார்ப்பன காங்கிரஸ்காரர்கள், “நாங்கள் 100க்கு மூன்று பேர்கள் தாமே; நீங்கள் 97 பேர்கள் இருக்கிறீர்களே; நாங்கள் தாம் மைனாரிட்டிகள்” என்பார்கள். இந்த இரகசியம் உங்களுக்குத் தெரியாது. நாம், பேருக்கு வேண்டுமானால் 97 ஆவோம். ஆனால் நம்மை பல வகுப்புகளாக பிரித்திருக்கின்றனர். உடையார், செட்டியார், ரெட்டியார், பிள்ளை, நாயுடு, முதலியார், கள்ளர், கவுண்டர், மறவர், அகமுடையார், அம்பட்டர், வாணியர், ஆர்சுத்தியார், புற்றிலே கழிந்தார், பொரபொரத்தார் என்று முழுவதும் சொல்லலாம்; அவ்வளவு எண்ணற்ற பிரிவுகள்! இங்கே ஒருவனுடைய கவலையை மற்றவன் எடுத்துக் கொள்வதில்லை. அப்படி எடுத்துக் கொண்டாலும், அதுவும் பார்ப்பனர்களுக்குத் தான் அனுகூலம். ஒரு ‘பிள்ளையை’ அடித்தால், மற்றொரு ‘முதலி’ பார்த்துக் கொண்டு சந்தோஷப்படுவதல்லாமல், “வெள்ளாளப் பயலுக்கு நல்லா வேணும்” என்று காலாட்டிக் கொண்டிருக்கிறான். ஒரு பாப்பான் உதைபடட்டும்– இமாலய மலையிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை சத்தம் கேட்குதே! யார் மைனாரிட்டி என்று யோசித்துப் பாருங்கள்!

**‘குடி அரசு’ 31.12.1939**

## ‘பெரியாரும்–மார்க்சியமும்’ தலைப்பில் கொளத்தூர் மணி உரை (3)

# சமதர்ம புரட்சி ரஷ்யாவில் உருவாகுவதற்கு முன் இந்தியாவில் வராமல் போனது ஏன்?

*குமரி மாவட்டம் குழித்துறையில் ஜன.24, 2021 அன்று ‘பெரியாரும் மார்க்சியமும்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை இது.*

*எம்.சி.பி.அய்.(யு) என்ற மார்க்சிய கட்சி - தமிழ்நாட்டில் மார்க்சியர்கள் - பெரியாரியலை உள்வாங்கிக் கொள்ளவில்லை என்ற விமர்சன அறிக்கையை வைத்திருந்தது. அதைத் தொடர்ந்து இக்கட்சி வெளியிட்டுள்ள கொள்கை அறிக்கையில், “சாதி–மதப் பிரிவினை சக்திகள் வலிமை பெற்றிருக்கும் இக்காலக்கட்டத்தில் பெரியார், அம்பேத்கரின் தேவையை கட்சி பூரணமாக உணர்ந்துள்ளது” என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அந்தப் பின்னணியில் இந்தக் கருத்தரங்கையும் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

நம் உலகம் ஒரு பக்கா தனியுடைமை உலகம் என்று எழுதி (நிறைய கருத்துக்கள், அவையெல்லாம் சொல்ல வேண்டியதில்லை), அடுத்ததாக நான் சொல்வது என்னவென்றால், பெரியார் 1930ஆம் ஆண்டு அதற்கு முன்னாலிருந்து பொதுவுடமை கருத்துகளை இன்னும் பல செய்திகளை, பொது வுடமை பற்றிய கட்டுரைகள் எல்லாம் தன்னுடைய ’குடிஅரசு’ பத்திரிக்கையில் வெளியிடத் தொடங்கு கிறார். முதலில், பொதுவுடமையின் தத்துவம் என்ற பிரடரிக் எங்கல்ஸ் எழுதிய நூலை மொழிபெயர்த்து தன்னுடைய ‘குடிஅரசு’ பத்திரிக்கையில் வெளியிடு கிறார். அடுத்து, கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை என்பது, இந்தியாவில் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்த கால கட்டத்தில், இவையெல்லாம் இந்திய மொழிகளில் வரவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை யாருக்கும் கிடைப்பதில்லை. அதை பெரியார் தன்னுடைய ’குடிஅரசு’ இதழில், சமதர்ம அறிக்கை என்ற பெயரால், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை மொழி பெயர்த்துப் போடுகிறார். அது வரைக்கும் அந்த அறிக்கை தமிழில் வரவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். தமிழில் யாருமே மொழி பெயர்த்து போடவில்லை. பெரியார் மொழி பெயர்த்து குடிஅரசு ஏட்டில் தொடர்ந்து வெளியிடு கிறார். 1931ஆம் ஆண்டு வெளியிடத் தொடங்குகிறார்.

அப்போது அவருடைய பார்வையை மட்டும் சொல்லி விடுகிறேன். அந்த அறிக்கை மொழி பெயர்ப்பு முன்னுரையில் சில செய்திகளை அவர் முன்வைக்கிறார். மற்ற செய்திகளும் சொல்லுகிறார். “தற்காலம் ரஷியாவிலும் ஸ்பெயினிலும் சில இடங்களிலும் சமதர்மம் பொதுவுடமை பெயரால் கிளர்ச்சிகளும் அரசாட்சிகளும் நடந்து வருவது எவருக்கும் தெரியும்”. இப்படிப்பட்ட உணர்ச்சி என்பது ஜெர்மனியில் தோன்றியிருந்தாலும், இதற்கான முதல் மாநாடு லண்டனில் நடந்திருந்தாலும், முதல் புரட்சி பிரான்சு நாட்டில் நடந்திருந்தாலும், அதற்கான நல்ல புரட்சியும் அரசும் ஏற்பட்டது ரஷியாவில் ஏற்பட்டது. “சரித்திரத்தில் சமதர்ம உணர்ச்சி பெற்றவர்கள் முதன்மையான முக்கியஸ்தர்கள் ஜெர்மானியராக இருந்தாலும், அதற்காக மாநாடு கூட்டியது லண்டன் பட்டணமாக இருந்தாலும், அதற்கு அப்பொழுதே கிளர்ச்சி நடந்தது பிரான்சு தேசமாயிருந்தாலும், முதன் முதல் அனுபவத்தில் கொண்டுவர முயற்சிக்கவேண்டிய இடம் ரஷியாவாகவே ஏற்பட்டுவிட்டது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாக இருந்தாலும், அந்தப்படி ஏற்படுவதற்கு நியாயம் இல்லாமல் இல்லை. என்ன நியாயம் என்று வாசகர்கள் கேட்பீர் களேயானால், அதற்கு நமது சமாதானமானது, எங்கு அளவுக்கு மீறிய தாங்க முடியாத கொடுமை நடைபெறுகிறதோ, அங்கு தான் சீக்கிரத்தில் பரிகார உணர்ச்சி வீறுகொண்டு எழவும், சீக்கிரத்தில் இரண்டில் ஒன்று காணவும், காரியம் நடைபெறும். எனவே நியாயப்படி பார்ப்போமேயானால், உலக அரசாங்கங்களில் ரஷிய ஜார் அரசாங்கமே மிகக் கொடுங்கோன்மையாக நடைபெற்று வந்திருக்கிறது. அதனாலேயே அங்கு சமதர்ம முயற்சி அனுபவத்திற்கு கொண்டுவர வேண்டியதாயிற்று. இந்த நியாயப்படி பார்த்தால், அவ்வித சமதர்ம உணர்ச்சி உலகில் ரஷிய தேசத்தை விடவும் இந்தியாவுக்கே முதன்முதலாக ஏற்பட்டிருக்க வேண்டியதாகும். ஆனால் அந்தப்படி ஏற்படாமல் இருப்பதற்கு இங்கு அனேகவித சூழ்ச்சிகள் நடைபெற்று வந்திருப்பதாலும், சூழ்ச்சிக் காரர்கள் இந்திய மக்களை வெகு ஜாக்கிரதையாக கல்வி அறிவு உலக ஞானம் சுயமரியாதை உணர்ச்சி முதலியன பெறுவதற்கு மார்க்கமில்லாமல் காட்டுமிராண்டி தன்மையில் வைத்து வந்ததோடு, கடவுள் பெயராலும் மதத்தின் பெயராலும் ஏற்படுத்தப்பட்ட உணர்ச்சியானது அடிமையாக



இருப்பதே கடவுள் சித்தம் என்றும், மோட்ச சாதனம் என்றும் புகட்டி வந்த தாலும், அதே சூழ்ச்சிக் காரர்கள் அடிக்கடி வேற்றரசர்களை அழைத்து வந்து மக்களை மிருகத் தனமான ஆதிக்கத்தால் அடக்கி ஆளச் செய்துவந்ததாலும் உலகில் சமதர்ம உணர்ச்சி முதன்முதலாக இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்க வேண்டியது மாறி ரஷ்யாவுக்கு முதல் ஸ்தானம் ஏற்பட வேண்டியதாயிற்று.” இதனால்தான் இங்கு புரட்சி வரவில்லை/

முதலில் இங்கல்லவா வந்திருக்கவேண்டும், ஏன் வரவில்லையென்றால் இங்கே ஒரு கூட்டம் இருந்து, அது உனக்கு என்ன பண்ணுவது, உன் தலை விதி, நீ ஏழையாக இருக்கின்றாய், அவன் பணக்காரன் போன ஜன்ம புண்ணியம் என்றெல்லாம் சொல்லிச்சொல்லி ஏமாற்றி வந்ததால்தான், இங்கே புரட்சி வரவில்லை. ஏனென்றால் இங்கே தானே புரட்சி வந்திருக்க வேண்டும், ரஷியாவிற்கு முன்னால், என்றெழுதி விட்டு, “ஆனபோதிலும் கூட இப்போது உலகில் மற்ற எல்லா பாகங்களிலும் ஏற்பட்டுவிட்ட காரணத்தால், இந்தியாவிலும் ஏற்பட வேண்டியது தவிர்க்க முடியாத அவசியமாய் போய்விட்டதால், இங்கும் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது. ஆனால், இந்தியா வுக்கும் மற்ற தேசத்திற்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருந்து வருகிறது. அது என்னவென்றால், மற்ற நாடுகளில் ஒரு விஷயம் தான் முக்கியமாய் கருதப்படு கின்றது. அதாவது, முதலாளி-வேலையாள், பணக்காரன்-ஏழை, என்பதுவேயாகும். ஆனால், **இந்தியாவிலோ மேல் ஜாதியார்-கீழ்ஜாதியார் என்பது ஒன்று அதிகமாகவும், முதன்மையாக வும் இருப்பதால்,** அது பணக்காரன்-ஏழை தத்து வத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக் கொண்டு வருகிறது”. இதில் ஜாதி என்பது ஒன்று அதிகமாக என்று சொல்வது மட்டுமல்ல, முதன்மையாக என்ற சொல்லை பயன்படுத்துகிறார்.

- **கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை முதலில் தமிழில் வெளியிட்டார் பெரியார்.**
- **இந்தியாவில் பணக்காரன்-ஏழை முரண் பாட்டைவிட மேல் ஜாதி - கீழ் ஜாதி முரண்பாடு முதன்மையாக இருக்கிறது என்று அந்த நூலின் முன்னுரையில் குறிப்பிட்டார்.**
- **1931 விருதுநகர் மாநாட்டில் சமதர்மமே இலட்சியம் என்று அறிவித்து முதன்முறையாக மதங்கள் ஒழிய வேண்டும் என்று தீர்மானம் போடுகிறார்.**
- **1932 மே மாதம் இரஷ்ய மே தினம் அணி வகுப்பில் அந்நாட்டு பிரதமருடன் பங்கேற்றார்.**
- **இங்கிலாந்தில் தொழில் கட்சி நடத்திய மாநாட்டில் பங்கேற்று அம்மாநாட்டிலேயே அக்கட்சியைக் கடுமையாக துணிவுடன் விமர்சித்தார் பெரியார்.**

வழக்கமாக மார்க்சிய சொல்லாடல்களில் அதைச் சொல்லுவோம், பிரதான முரண்பாடு அல்லது முதன்மை முரண்பாடு என்று சொல்லுவோம். அதற்காக சொல்லியிருப்பாரோ என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால், அதிகமாகவும் முதன்மை யாகவும் இருப்பதால் அது பணக்காரன்-ஏழை தத்து வத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக் கொண்டு வருகிறது. இதை நான் மொழிபெயர்த்து வெளியிடலாம் என்பதால் தான், ”இவ்விவரங்கள் இந்த அளவில் நிற்க, முன் குறிப்பிட்ட.. அதாவது சமதர்ம கொள்கை சம்மந்தமான அந்த காலத்தில் வெளியான ஒரு அறிக்கை மக்கள் உணரும்படியாக வெளிப்படுத்தலாம் என்று நாம் கருதுவதால், அதை மொழிபெயர்த்து வெளியிடலாம் என்று வெளியிட்டு இருக்கிறேன்” என்று சொல்லுகிறார்.

அதற்கு முன்னாலேயே இயக்கங்கள் நடந்து வந்திருக்கின்றன. மார்க்சிய சிந்தனையாளர்கள் இங்கு பல்வேறு அமைப்புக்களாக இருந்து செயல்பட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். நாம் சொல்லும் பழங்கணக்கு, 1925-ல் கான்பூர் மாநாடு, 1938-ல் பல பெயர்கள் சொன்னாலும் கூட, அதற்கு முன்னேயே இருந்திருக்கிறார்கள். காங்கிரசில் சோசியலிச கட்சியாக இருந்து இயங்கி இருக்கிறார்கள். இதெல்லாம் நடந்து வந்திருக்கிறது. அதற்கு முன்னரே, 1931 ஆகஸ்ட்டு மாதம் ஒரு மாநாடு நடந்திருக்கிறது விருது நகரிலே. அதில், இந்த அறிக்கை வெளியிடும் முன்பே, அந்த மாநாட்டில் பெரியார் ஒரு தீர்மானம் போடுகிறார். அதில் நாம் சமதர்மம் என்பது தான் இந்த நாட்டிற்கு தீர்வாக இருக்க முடியும் என்கிற தீர்மானத்தை அதில் நிறைவேற்றுகிறார்கள். அதில் மத ஒழிப்பு தீர்மானம் முதல் முறையாக அப்பொழுது தான் போடுகிறார். அதற்கு முந்தியெல்லாம், கடவுள் மறுப்பு பேசியிருந் தாலும், எல்லாவற்றுக்கும் தடையாக வந்து நிற்பது, மதமும் கடவுள் உணர்ச்சி என்பதால், மதங்கள் ஒழியவேண்டும் என்பதற்கும், அதை ஒழிப்பதற்கு பாடுபடவேண்டும் என்பதாக தீர்மானிக்கிறது, என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றுகிறார்.

அதற்கு பின்னால் அவருடைய ரஷிய பயணம் நடக்கிறது. தொடக்க காலத்தில், ரஷியாவிற்கு சென்ற தலைவர்களில் பெரியாரை ஒருவராக நாம் சொல்லலாம். அவர் அந்த ஆண்டு போய், ஒரு மூன்று மாதங்கள், 1931-ம் ஆண்டு புறப்பட்டு போனால் கூட, இங்கிருந்து எகிப்து கிரீஸ் துருக்கி போன்ற நாடுகளுக்கெல்லாம் போய், அப்புறம் தான் ரஷியாவிற்கு 1932ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தான் போய் சேருகிறார். மூன்று மாத காலம் அங்கே இருக்கிறார். மே மாத இறுதி வரையில் அங்கே இருக் கிறார். மே தின விழாவில் பெரியார் அறிமுகப்படுத்தப் படுகிறார். அந்த விழா அணிவகுப்பில் ரஷ்ய பிரதமர் அவர்களோடு எல்லாம் நிற்கிறார். இந்தியாவிலிருந்து வந்திருக்கிற நாத்திகத் தலைவர் என்று அறிமுகப் படுத்தப்பட்டு, வரவேற்பு கொடுக்கப்படுகிறது. அதற்கு பின்னால் அங்கிருந்து, அவரோடு சென்ற எஸ்.இராமநாதன், டிராட்கியிஸ்ட்களிடம் போய் இரகசியமாகப் பேசுகிறார். இவரோடு வந்தவர் அவர் என்பதை உளவுப்படை அறிந்தவுடன், பெரியாரை யும், அவரது குழுவினரும் உடனடியாக வெளியேற வேண்டும் என்று ரஷ்ய அரசு ஆணையிடுகிறது; வெளியேறி வந்து விடுகிறார்கள்.

அதன் பின்னர் அங்கிருந்து இங்கிலாந்து போய் ஜெர்மனி, பிரான்சு எல்லாம் போய்விட்டு, அதற்குப் பின்னால் நவம்பர் மாதம் இலங்கை வழியாக தமிழ்நாடு வருகிறார். பதினோரு மாத காலம் உலகச் சுற்றுப்பயணமாகப் போய், இந்த ஸ்பெயின் போன்ற நாடு - எங்கெல்லாம் புரட்சி நடந்திருக்கிறதோ, பொதுவுடமை எங்கெல்லாம் மலர்ந்து வருகிறதோ, அங்கெல்லாம் போய் எல்லோரையும் சந்திக்கிறார். இங்கிலாந்து போனபோது, சக்லத்வாலா என்கிற, இந்தியாவிலிருந்து போய் அங்கே பொதுவுடமை கட்சி எம்.பி.யாக இருக்கிற அவரை சந்திக்கிறார். தொழில் கட்சி நடத்துகிற ஒரு மாநாட்டில் பெரியார் பேசியிருக்கிறார். மாநாட்டில் அவர் பேசியதை கேட்டால் வியப்பாக இருக்கும். இப்படியெல்லாம் ஒரு மனிதர் - லான்ஸ்பெரி என்கிற தொழில் கட்சி தலைவர் தலைமையில் மாநாடு. அதில் பெரியார் வந்திருக்கிறார், பேசுங்கள் என்று சொல்லியிருக் கிறார்கள். பெரியார் சொல்கிறார். இந்த தொழில் கட்சிகாரர்களெல்லாம் இந்தியர்களைக் கேவலமாகப் பார்ப்பார்கள்; எங்களை விட கேவலமாக உங்கள் தொழில் கட்சியை நான் பார்க்கிறேன் என்று அந்த மாநாட்டிலேயே பேசுகிறார். அந்தப் பேச்சை கேட்க நமக்கு வியப்பாக இருக்கும். எப்படி ஒரு மனிதர் அந்த ஊரில் போய் அந்த நாட்டில் பேசுகிற உரை “இங்கிலாந்தில் ஈவெரா சொற்பொழிவு” என்று அது வந்திருக்கிறது. இந்தியர்களாகிய எங்களை ஒரு பரிகசிக்கத் தகுந்த ஒரு சமூகமாகக் கருதலாம், ஆனால் நாங்கள் பிரிட்டீஷ் தொழிற்கட்சியை மிகவும் பரிகசிக்கத் தகுந்த விஷயமாய்க் கருதுகிறோம் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். பேச ஆரம்பிக்கும் முன் இதைச் சொல்லி ஆம்பிக்கிறார். அங்கே உட்கார்ந்திருப்பவர் தொழிற்கட்சித் தலைவர். என்னவெல்லாம் சொல்கிறார் என்றால், நீங்கள் தோழர் லான்ஸ்பெரி அவர்கள் இந்தியர்கள் விஷயத் தில் மிக்க அனுதாபமாக இருப்பதால், இந்தியர்கள் சுடப்படுவதையும், அழிக்கப்படுவதையும் சிறையில் அடைக்கப்படுவதையும் விரும்பவில்லை என்றும் சொல்லிக் கொள்வதாகக் கேள்விப்பட்டேன். ஆனால், தோழர் லான்ஸ்பெரியின் தொழிற்கட்சி அரசாங்கக் காபினட் ஆனது, சுமார் 80,000 பேர் வரை இந்திய ஆண் பெண்களை ஜெயிலில் அடைத்திருக் கிறது. ஆயிரக்கணக்கான மக்களை சுட்டுத் தள்ளியிருக்கிறது. நீ என்ன சொல்கிறாய், என்கிறார். அப்பொழுது அங்கு சுரங்கத் தொழிலாளர்களுக்காக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், நாலணா கூலி உயர்வுப் போராட்டம். பெரியார் சொல்கிறார், உங்களுக்குத் தெரியுமா? இந்தியாவில் சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஐந்தணா தான் கூலி. நீங்கள் நாலணா கூலி உயர்வுக்கு போராட்டம்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘அண்ணாவை பேசுவோம்; வாசிப்போம்’ – கழகம் நடத்திய கருத்தரங்கம்







திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், பேரறிஞர் அண்ணாவின் நினைவு தின கருத்தரங்கம், ‘அண்ணாவை பேசுவோம், வாசிப்போம்’ என்ற தலைப்பில், 27.02.2021 சனிக்கிழமை, திராவிடர் விடுதலைக் கழகம் சென்னை தலைமை அலுவலகத்தில், மாலை 6 மணியளவில் தொடங்கி நடைபெற்றது. கழகத்தின் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் வரவேற்பு கூறினார். அறிவுமதி தலைமை வகித்தார்.

‘திராவிடம் பேசிய சிறுகதைகள்’, ‘அண்ணாவின் ஆரிய மாயை’, ‘அண்ணா - திராவிட நாடு’ ஆகிய தலைப்புகளில் தேன்மொழி, மதிவதினி, சந்தோஷ் ஆகிய தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் கருத்துரையாற்றினர். இறுதியாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ‘அண்ணாவை ஏன் பேச வேண்டும், தற்போதைய பாஜக ஆட்சியில் பறிபோன உரிமைகள் மீட்க எப்படி அண்ணா தேவைப்படுகிறார், பார்ப்பனியம் அண்ணாவிடம் எப்படி தோற்றது’ போன்றவற்றை தெளிவாக விளக்கி சிறப்புரையாற்றினார்.

கருத்துரையாற்றிய தோழர்களுக்கு, சரவணக்குமார் எழுதிய ‘தம்பிக்கு’ என்ற புத்தகத்தை, பேராசிரியர் சரஸ்வதி வழங்கினார். இறுதியாக தென்சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி நன்றி கூறினார்.

## கழகத் தோழர் அறிவரசு நினைவேந்தல் நிகழ்வு



திராவிடர் விடுதலைக் கழக கோவை மாவட்ட தோழர் அறிவரசு கடந்த 21.02.2021 அன்று அதிகாலை 3:30 மணியளவில் மாரடைப்பால் முடிவெய்தினார். தோழர் அறிவரசு படத்திறப்பு விழா மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 28.2.2021 அன்று மாலை 6 மணி அளவில் கோவை துடியலூர் அண்ணா குடியிருப்பில் நடைபெற்றது.

நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு படத்தைத் திறந்து வைத்தார். தொடர்ந்து நேருதாசு நிகழ்விற்கு தலைமை வகித்தார். துடியலூர் அண்ணா குடியிருப்பைச் சேர்ந்த தோழர்கள் அல்போன்சு, திமுக முன்னாள் கவுன்சிலர் மருதாசலம், SDPI பாதுஷா, மக்கள் விடுதலை முன்னணி முகிலன், தமிழ் புலிகள் கட்சி சபாபதி, புரட்சிகர இளைஞர் முன்னணி மலரவன், சமூக நீதிக் கட்சி வெள்ளமடை நாகராஜ், திராவிட தமிழர் கட்சி வெண்மணி, ஜெயச்சந்திரன், தந்தை பெரியார் திராவிடர் கழகம் சண்முகசுந்தரம், பொள்ளாச்சி விஜயராகவன், தோழர் அறக்கட்டளை சாந்தகுமார், கோவை மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர்.

நிகழ்வில் கழகப் பொருளாளர் துரைசாமி, அமைப்பு செயலாளர் இரத்தினசாமி, தலைமைக்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், கோவை மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன் மற்றும் கோவை திருப்பூர் மாவட்ட தோழர்களும், அறிவரசுவின் நண்பர்களும், பகுதி மக்களும் திரளாகக் கலந்து கொண்டனர். இறுதியாக வெங்கட் நன்றி கூறினார். நிகழ்ச்சி முடிந்தபின் அறிவரசுவின் தாயார் இல்லத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி நேரில் சென்று குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

## கழகப் பரப்புரைச் செயலாளர் பிரபாகரன் தாயார் உடல் நிலை: கழகப் பொறுப்பாளர்கள் நலம் விசாரித்தனர்

கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் தாயார் உடல்நலமின்றி இருக்கிறார். கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் 7.2.2021 அன்று பிரபாகரன் இல்லம் சென்று தாயாரின் உடல்நலம் விசாரித்தனர். முன்னதாக மதுரை மாவட்ட கழகத் தோழர் காமாட்சி பாண்டியையும் (பிப்.6), பிப்.7 அன்று நெல்லை மாவட்டம் கீழப்பாவூர் கழகத் தோழர் மாசிலாமணி இல்லத்தில் கழகத் தோழர்களையும் சந்தித்து கழக செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினர். மார்ச் 7ஆம் தேதி மகளிர் தினவிழாவை குடும்பத்துடன் குற்றாலத்தில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

3ஆம் பக்கத் தொடர்ச்சி

செய்கிறீர்கள். தொழிற்கட்சி என்று பேர் வைத்திருக் கிறாய், என்று பேசுகிறார். இந்த துணிச்சல் வேறு யாருக்கு வரும் என்று என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. ஏனென்றால் அந்த நாட்டில் ஆட்சி செய்துக் கொண்டிருக்கிற ஒரு கட்சியின் தலைவர் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிற மாநாட்டில் அவரிடம் பேசுகிறார். நீ என்னய்யா எங்களை யெல்லாம் பார்த்து பேசிக் கொண்டிருக்கிறாய், என்ன இருக்கிறது பேச, நீ தொழிற்கட்சி என்று பேர் வேறு வைத்துக் கொண்டு இருக்கிறாய், என்று அதில் சொல்லுகிறார். தொழிலாளர்களே, நீங்கள் இந்த போலிக் கட்சிகளையும் கொள்கைகளையும் நம்பாமல், மனித சமூக விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்கும் உண்மையாகவே போராட, உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமை எதிர் நோக்கிக் கொண்டு இருங்கள், என்று பேசி முடிக்கிறார். தொழிற்கட்சி நடத்தியிருக்கிற மாநாட்டில் போய், இவர்களை யெல்லாம் நம்பாதே, நீ புரட்சிக்கு தயாராகு, என்று பேசுகிற உரையை இங்கிலாந்தில் பெரியார் ஆற்றியிருக்கிறார். (தொடரும்)

## கழக சார்பில் தலைமை நிலையத்தில் ‘தா.பா.’ படத்திறப்பு



மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் தா. பாண்டியன் நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்வு தி.வி.க. தலைமை அலுவலகத்தில் 27.2.2021 அன்று நடைபெற்றது. படத்தை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்தார்.

## வினா விடை

- கோயில்களுக்கு உரிய நான்கு சக்கர வாகனங்கள் ‘இறைவனுக்கு’ மட்டுமே உரிமையானது. அரசு தேர்தல் பணிகளுக்கு பயன்படுத்தக் கூடாது. **– இந்து அறநிலையத் துறை அறிவிப்பு**

  ஆகம விதிகளில் மோட்டார் வாகன விதிகளையும் சேர்த்து விட்டீர்களா? சொல்லவே இல்லை.

- ஜெர்மன் நாட்டின் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை மூடப்படுகிறது; தமிழக அரசு உறுதி அளித்தபடி 1 கோடியே 24 இலட்சத்தை வழங்காததே காரணம். **– செய்தி**

  தமிழைத் தமிழ்நாட்டில் வளர்ப்பதுதான் அம்மா ஆட்சி; ஜெர்மனியில் அல்ல என்பதை எதிர்கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

- மோடி படம் – பகவத் கீதையுடன் செயற்கைக் கோள் ஏவப்பட்டது. **– செய்தி**

  நல்லது; ‘செயற்கைக் கோள்’ பெயரை உடனே ‘இராமபானம்’ என்று மாற்றி விடுங்கள்!

- மூலைக்கு மூலை கோயில்கள் இருப்பதால்தான் நாம் கொரனாவி லிருந்து மீண்டோம். **– இந்து மாநாட்டில் தமிழிசை**

  கொரானா காலத்தில் கோயில்களே மூடப்பட்டிருந்ததை தமிழிசை மறந்து விட்டார் போல!

- கடவுள் எந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்தையும் தனியாக அங்கீகரிக்கவில்லை; மனித சமூகத்தை மட்டுமே அங்கீகரிக்கிறார். **– சென்னை உயர்நீதிமன்ற அமர்வு**

  உலகம் கடவுளுக்கு கட்டுப்பட்டது; கடவுள் மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டவர்; மந்திரங்கள் பிராமணர்களுக்கு கட்டுப்பட்டவை. எனவே பிராமணனே கடவுள் – ரிக் வேதம்.

## கழக ஏட்டுக்கு நன்கொடை

கடந்த 10.01.2021 அன்று திருமணமான புதிய இணையர்கள் அறிவுமதி-தமிழன்பன், கழக வார ஏடான, ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு வளர்ச்சி நிதியாக ரூ 5000-யை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் அண்ணா நினைவு நாள் கருத்தரங்கில் (பிப்.27) வழங்கினர்.

அதைத் தொடர்ந்து, சென்னை கழகத் தோழர் விஜயனும் ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு நன்கொடையாக ரூ 1000 அளித்தார்.

17.2.2021 அன்று தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி பிறந்த நாளன்று விரட்டுக் கலைக் குழு ஆனந்த் கழக ஏட்டிற்கு ரூ.2000 நன்கொடை அளித்தார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 05th March 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN